19.10.2022  அ.வ.எண்.446/2014

வா.சா.1, ஜெயராமன்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) வழக்கின் முழு விவரமும் எனக்கு தெரியும். தாவா சொத்தை பதிவு செய்து தரவேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் ஒரு தனியார் நிறுவனத்தில் சென்னையில் வேலை செய்து வந்தேன் கொரோனா காலகட்டத்தில் நிறுவனம் மூடப்பட்டதால் தற்போது வேலைக்கு செல்லவில்லை. வழக்கு சொத்தில் குடி வருவதற்கு முன்பு அதே குடியிருப்பில் வேறு ஒரு வீட்டில் குடியிருந்தேன். மேற்படி வீட்டில் 2009ல் இருந்து குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தில் 2011ல் இருந்து குடியிருந்து வருகிறேன்.

2) மேற்படி வீட்டிற்கு ஒத்தியின் பெயரில் குடிவந்தேன். அந்த ஒத்திக்காக நான் ரூபாய் 350000 பிரதிவாதியிடம் செலுத்தினேன். அந்த ஒப்பந்தம் 11 மாத காலத்திற்காக போடப்பட்டது என்று நினைக்கிறேன். மேற்படி ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை. மேற்படி வீட்டின் உரிமையாளர் பிரதிவாதி என்பதை காட்டுவதற்காக எந்த ஆவணமும் ஒத்திக்கு ஒப்பந்தம் போடும் போது நான் பார்க்கவில்லை. நான் குடியிருக்க ஆரம்பித்து 6 மாதங்களில் பிரதிவாதி என்னை வீட்டை காலி செய்ய சொன்னார் தேதி மாதம் வருடம் ஞாபகம் இல்லை. என்ன காரணத்திற்காக பிரதிவாதி வீட்டை காலி செய்ய கோரினார் என்றால் வீட்டின் மேல் வங்கி கடன் இருப்பதால் வீட்டை விற்கபோவதாக கூறினார். அதை எந்த நாள் என்னிடம் கூறினார் என்ற தேதி ஞாபகம் இல்லை.

(கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)